செய்தி வெளியீடு எண்: 323 நாள் : 03.07.2015

## செய்தி வெளியீடு

**தமிழ்நாடு அரசு**
**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

**இடைநிலை ஆசிரியர் பணிநியமன கலந்தாய்வு**

ஆதிதிராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து 454 இடைநிலை ஆசிரியர் பணிநாடுநர்களின் பெயர்ப் பட்டியல் பெறப்பட்டுள்ளது.

இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிநாடுநர்களுக்கு 08/07/2015 முதல் 11/07/2015வரை நான்கு நாட்களுக்கு ஒரு நாளைக்கு 115 நபர்கள் வீதம் சென்னை – 5 சேப்பாக்கம், ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் ஆசிரியர் தேர்வு வாரியப் பட்டியல் வரிசையின் அடிப்படையில் கலந்தாய்வு நடத்தப்பட்டு பணிநியமன ஆணைகள் கலந்தாய்வு நாளன்றே வழங்கப்பட உள்ளன. கலந்தாய்வு விவரங்களை www.tn.gov.in/announcements என்ற இணையதளத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஒம்/- சு. சிவசண்முகராஜா.
ஆதிதிராவிடர் நல இயக்குநர்.

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9